சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா. 01 திரு. வெங்கடேஸ்வரா த /பெ திரு. இராதகிருஷ்ணன் , வயது .45

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .-**

1. 24.10.2019 அன்று நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் இரமேஸ் டிராக்டெர்சின் உரிமையாளர் மூலம் எனக்கு பழக்கம் ஆனார். எனவே எதிரியை நேரடியாக எனக்கு தெரியாது என்றால் நானும் இரமேஸ் டிராக்டெர்சின் உரிமையாளரும் தினமும் சந்திப்போம். அப்போது எதிரியும் வருவார். எனவே எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. 2019 ஜனவரில் இருந்து எதிரி எனக்கு பழக்கம் ஆனார். இரமேஸ் டிராக்டெர்சின் உரிமையாளர் பெயர் சிட்டி பாபு ஆகும். எனக்கும் எதிரிக்கும் எவ்வாறு தகவல் பரிமாற்றம் ஏற்பட்டது என்றால் நாங்கள் இருவரும் தினமும் சந்தித்துக்கொள்ளும் போது பேசுவோம். 10.03.2019 அன்று நான் எதிரிக்கு வாணியம்பாடி இரமேஸ் டிராக்டெர்சில் வைத்து பணம் கொடுத்தேன். அப்போது யாரோனும் சாட்சிகளாக இருந்தார்களா என்றால் சிட்டி பாபு என்பவர் சாட்சியாக இருந்தார். 09.10.2019 அன்று காலை 8.00 மணிக்கு எதிரி இவ்வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார். 09.10.2019 அன்று கரூர் வைசிய வங்கியில் நான் காசோலையை செலுத்தினேன். 10.10.2019 அன்று காசோலை திருப்பபட்டதாக மெமோ கிடைத்தது.

Witness sign